



இளைஞர் நலன் மற்றும் விளையாட்டு மேம்பாட்டுத் துறை அமைச்சர் உதயநிதி ஸ்டாலின் அவர்கள் நேற்று முன்தினம் (31.08.2024) சென்னை ஃபார்முலா ஸ்ட்ரீட் சர்க்யூட் போட்டியினை கொடியசைத்து தொடங்கி வைத்து பார்வையிட்டார். இந்நிகழ்ச்சியில் அமைச்சர் பெருமக்கள், பெருநகர சென்னை மாநகராட்சி மேயர், நாடாளுமன்ற உறுப்பினர்கள், சட்டமன்ற உறுப்பினர்கள் மற்றும் அரசு உயர் அலுவலர்கள் கலந்து கொண்டனர்.



முதல்வர் மு.க.ஸ்டாலின் அவர்களின் வழிகாட்டுதலின்படி, திருவண்ணாமலை மாவட்டம், ஜவ்வாது மலையில் கலைஞர் நூற்றாண்டு நிறைவு கோடை விழாவினை பொதுப்பணித்துறை நெடுஞ்சாலைத்துறை மற்றும் சிறு துறைமுகங்கள் துறை அமைச்சர் எ.வ. வேலு, சட்டப்பேரவை துணைத் தலைவர் கு.பிச்சாண்டி, சுற்றுலாத்துறை அமைச்சர் கா.ராமச்சந்திரன் ஆகியோர் துவக்கி வைத்தனர். உடன் நாடாளுமன்ற உறுப்பினர்கள் சி.என்.அண்ணாதுரை, எம்.எஸ்.தரணிவேந்தன், சட்டமன்ற உறுப்பினர்கள் மு.பெ.கிரி, பெ.சு.தி.சரவணன், எஸ்.அம்பேத்குமார் மற்றும் திருவண்ணாமலை மாவட்ட ஆட்சியர் தெ.பாஸ்கர பாண்டியன், மற்றும் உள்ளாட்சி பிரதிநிதிகள், துறை சார்ந்த அலுவலர்கள் கலந்து கொண்டனர்.





சென்னை எழும்பூர் – நாகர்கோவில் மற்றும் மதுரைபெங்களூர் கண்டோன்மென்ட் இடையே வந்தே பாரத் ரயில் சேவையை காணொளி காட்சியின் மூலமாக நிகழ்ச்சியினை தாம்பரம் ரயில் நிலையத்தில் கழக பொருளாளர் நாடாளுமன்ற கழகக் குழுத்தலைவர் டி.ஆர்.பாலு எம்.பி., அவர்கள் கலந்து கொண்டு கொடியசைத்து துவக்கி வைத்தார். இதில் தாம்பரம் மாநகர கழக செயலாளர் எஸ்.ஆர்.ராஜா எம்.எல்.ஏ., மேயர் க.வசந்தகுமாரி மற்றும் மண்டல குழுத்தலைவர்கள் டி.காமராஜ், எஸ்.இந்திரன் ஜோசப் அண்ணாதுரை வே.கருணாநிதி, எஸ்.சேகர், டி.ஆர்.கோபி கி.வேல்மணி, எஸ்.ஜி.கருணாகரன், ஜா.ரவிகுமார், ஆர்.செல்வக்குமார், செ.சுரேஷ், இரா.செல்வகுமார், இரா.விஜயகுமார் மற்றும் மாநகர, பகுதி கழக நிர்வாகிகள், அணிகளின் அமைப்பாளர்கள், துணை அமைப்பாளர்கள், மாமன்ற உறுப்பினர்கள், வட்ட கழக செயலாளர்கள், கழக தோழர்கள் 1000த்திற்கும் மேற்பட்டோர் கலந்து கொண்டனர்.

### காங்கேயம் ஒன்றியத்திற்குட்பட்ட பகுதிகளில்

# ரூ.4.76 கோடி மதிப்பீட்டில் புதிய திட்டப்பணிகள்!

## அமைச்சர் மு.பெ.சாமிநாதன் துவக்கி வைத்து முடிவுற்ற பணிகளை திறந்து வைத்தார்!

திருப்பூர், செப். 2 -

தமிழ் வளர்ச்சி மற்றும் செய்தித்துறை அமைச்சர், கழக உயர்நிலை செயல் திட்டக்குழு உறுப்பினர் மு.பெ.சாமிநாதன், மாவட்ட ஆட்சித்தலைவர் தா.கிறிஸ்து ராஜ் தலைமையில், திருப்பூர் தெற்கு மாவட்டக் கழக செயலாளர், மாநகராட்சி 4ம் மண்டலத்தலைவர் இல.பத்மநாபன் முன்னிலையில், 30.08.2024 வெள்ளிக்கிழமை அன்று திருப்பூர் மாவட்டம், காங்கேயம் ஒன்றியம், ஆலம்பாடி ஊராட்சி, நெய்க்காரன் பாளையத்தில் ரூ.12.30 இலட்சம் மதிப்பீட்டில் சட்டமன்ற உறுப்பினர் மேம்பாட்டுத் திட்டத்தின் கீழ் கட்டப்பட்ட நியாய விலைக் கடையை திறந்து வைத்து, பரஞ்சேர்வழி ஊராட்சி மன்ற அலுவலகம் அருகில் முதலமைச்சரின் கிராம சாலைகள் மேம்பாட்டுத் திட்டத்தின் கீழ் ரூ.11.11 இலட்சம் மதிப்பீட்டில் மொட்டரைப்பாளையம் சாலை முதல் ராமலிங்கபுரம் மயானம் வரையிலும், ரூ.47.39 இலட்சம் மதிப்பீட்டில் சின்னபரஞ்சேர்விழி ஆதிதிராவிடர் குடியிருப்பு முதல் பள்ளக்காட்டுப்புதூர் செல்லும் சாலை வரையிலும், பிரதம மந்திரியின் கிராமச் சாலைகள் மேம்பாட்டுத் திட்டத்தின் கீழ் ரூ.1.85 கோடி மதிப்பீட்டில் எம்.ஆர்.எல். 64 -மடவிளாகம் சாலை முதல் மூலக்கடை வழியாக ஆலாம்பாடி செல்லும் சாலை வரையிலும், ரூ.2.21 கோடி மதிப்பீட்டில் எம்.ஆர்.எஸ். 01 திட்டுப்பாறை சிவியார்பாளையம் சாலை முதல் கரிய காளியம்மன் கோவில் வழியாக பரஞ்சேர்விழி செல்லும் சாலை வரையிலும் மொத்தம் ரூ.4.64 கோடி மதிப்பீட்டில் தார்சாலை அமைக்கும் பணிகள் என மொத்தம் ரூ.4.76 கோடி மதிப்பீட்டிலான புதிய திட்டப்பணிகளை துவக்கி வைத்து, முடிவுற்ற பணிகளை திறந்து வைத்தார்.

இந்நிகழ்ச்சியில், கூட்டுறவு சங்கங்களின் துணைப் பதிவாளர் பழனிச்சாமி, காங்கேயம் வட்டாட்சியர் மயில்சாமி, தெற்கு மாவட்ட துணைச் செயலாளர் ராசி கே.ஆர்.முத்துக்குமார், ஒன்றிய கழக செயலாளர்கள் கே.கே.சிவானந்தன் காங்கேயம் தெற்கு, சி.கருணை பிரகாஷ் காங்கேயம் வடக்கு, நகர துணை செயலாளர் சுப்பு (எ) சுப்பிரமணியம், தலைமைப் பொதுக்குழு உறுப்பினர் எ.கே.எஸ். கார்த்திகேயன், காங்கேயம் வடக்கு ஒன்றிய அவைத்தலைவர், 3வது வார்டு ஒன்றியக்குழு உறுப்பினர் எம்.ரவி,

கீரனூர் ஊராட்சி தலைவர்கள் ஈஸ்வரமூர்த்தி, கீதாமணி சிவக்குமார், ராஜாமணி ரங்கசாமி, ஒன்றிய இளைஞர் அணி அமைப்பாளர் சக்தி வடிவேல், காங்கேயம் வட்டார வளர்ச்சி அலுவலர்கள் விமலாவதி, அனுராதா, உள்ளாட்சி அமைப்புகளின் மக்கள் பிரதிநிதிகள் மற்றும் துறை சார்ந்த அரசு அலுவலர்கள், மாவட்ட, ஒன்றிய, கிளை கழக நிர்வாகிகள், கழக துணை அமைப்புக்களின் அமைப்பாளர்கள் துணை அமைப்பாளர்கள் பலர் கலந்து கொண்டனர்.

# தாம்பரம் ரெயில் நிலையத்தில் வந்தே பாரத் ரெயில்: டி.ஆர்.பாலு எம்.பி. துவக்கி வைத்தார்!

## எஸ்.ஆர்.ராஜா எம்.எல்.ஏ. – மேயர் க.வசந்தகுமாரி – நிர்வாகிகள் பங்கேற்பு!

தாம்பரம், செப்.02–

சென்னை எழும்பூர் – நாகர்கோவில் மற்றும் மதுரை–பெங்களூர் கண்டோன்மென்ட் இடையே வந்தே பாரத் ரயில் சேவையை காணொளி காட்சியின் முலமாக நடைபெற்ற நிகழ்ச்சினை தாம்பரம் ரயில் நிலையத்தில் கழக பொருளாளர் நாடாளுமன்ற குழுத்தலைவர் டி.ஆர்.பாலு எம்.பி. கலந்து கொண்டு கொடியசைத்து துவக்கி வைத்தார்.

இதில் தாம்பரம் மாநகர கழக செயலாளர் எஸ்.ஆர்.ராஜா எம்.எல்.ஏ., மேயர் க.வசந்தகுமாரி, மண்டல குழுத்தலைவர்கள் டி.காமராஜ், எஸ்.இந்திரன், ஜோசப் அண்ணாதுரை, வே.கருணாநிதி, எஸ்.சேகர், ஆ.நடராஜன், இரா சுரேஷ், இ.எஸ். பெர்னாட் , டி.ஆர்.கோபி,செ.சுரேஷ் , பி.ஜோதிகுமார், லிங்கேஸ்வரி பாபு, சி. ஜெகன், பி.புகழேந்தி , எல்.பெரியநாயகம் , பி.ராஜ்குமார்,டிவி ராஜா, நெடுஞ்செழியன், கி.வேல்மணி, எஸ்.ஜி.கருணாகரன், இரா.செல்வகுமார், வி கார்த்திக், ச.இராஜேஷ், ச. இன்சமாம், வே. சிவசுப்பிரமணியம், இ.மனோகரன், இரா.விஜயகுமார், டி.கே.கோட்டி, சிப்ஸ்மணி, பி.சதாசிவம், கே.ரமேஷ், திருவஞ்சேரி சுரேஷ் பாபு, ஆர்.செல்வகுமார், எம். கன்னியப்பன், வி.முனுசாமி, எம்.சீனிவாசகுமார், எஸ்.கார்த்திக், எம்.வினோத், ஜி.ஸ்ரீதர் பாபு, எம்.விஜயன், ஆர். சஞ்சீவி, எஸ்.ஐசக், சுரேஷ், கே.பிரபாகரன், வ.லோகநாதன்,

கே. ரமேஷ் பாபு, சீ.செழியன், டி.வி.முருகன், சிவக்குமார், பி.ராஜ்குமார், பி.எச். பிரான்சிஸ்பால், ரங்கநாதன், மகேஸ்வரி, கார்த்திகேயன், எல்.ராஜன், கே.எஸ்.யுவராஜ், எஸ். பாஸ்கர், கே.தேனுபுரி, பதவஞ்சேரி ஞான பிரகாசம், டைகர் சிவா, பல்லாவரம் சிவகுமார், ரமேஷ், ஆர்.அகஸ்டின், எஸ்.கண்ணன், குத்துஸ் கனி, டி.ஆர்.முரளி , பல்லாவரம் சதீஷ்,ரோமரிய இருதயராஜ், வை.தங்கராஜ் , சித்திரம் ஜா. வாசுதேவன், இ. நவீன் குமார், சந்தோஷ் குமார், இ.பாலாஜி, மூ.பாபு, திருநீர்மலை புருஷோத், வழக்கறிஞர் பி.ஜி.பிரபு, ராமச்சந்திரன், சி.பரிமளா.

பா.பிரதாப், அ.லோகேஷ் குமார், வி.ஜி.சிவகுமார், என்.அர்ஜுனன், உ.இளங்கோ, சுந்தர், பிரபாகரன், வே .தங்கராஜ், பதுவஞ்சேரி. தாமோதரன், சக்தி, குபேந்திரன், ப.மோகன், ஆர்.ஹரி, ஏ.கே.முரளி, தினேஷ், சே.முகுந்தன், ஆர்.திவாகர் மற்றும் கழக தோழர்கள் பெரும் திராளக கலந்து கொண்டனர் .

### 2026 சட்டமன்றத் தேர்தலில்

# 200 தொகுதிகளில் வெற்றி பெற தீவிரமாக பாடுபடுவோம்!

## கள்ளக்குறிச்சி வடக்கு மாவட்டக் கூட்டத்தில் தீர்மானம்!

கள்ளக்குறிச்சி, செப்.2-

கள்ளக்குறிச்சி வடக்கு மாவட்டக் கழகத்தின் சார்பில் பொது உறுப்பினர்கள் ஆலோசனை கூட்டம் கள்ளக்குறிச்சி சேலம் மெயின் ரோட்டில் அமைந்துள்ள வி.ஏ.எஸ் தனியார் திருமண மண்டபத்தில் நடைபெற்றது.

கூட்டத்திற்கு வடக்கு மாவட்ட கழக அவைத்தலைவர் ஆ.ஜெ.மணிக்கண்ணன் எம்.எல்.ஏ. தலைமை தாங்கினார். தே.மலையரசன் எம்.பி., மாவட்ட துணைச் செயலாளர்கள் வாணியந்தல் ஆறுமுகம், திருநாவுக்கரசு, பாப்பாத்தி நடராஜன் ஆகியோர் முன்னிலை வகித்தனர்.சிறப்பு அழைப்பாளராக வடக்கு மாவட்ட கழக செயலாளர் தா.உதயசூரியன் எம்.எல்.ஏ. கலந்து கொண்டு கட்சியின் முப்பெரும் விழாவை முன்னிட்டு அனைத்து கிராமங்களிலும் கழக கொடி ஏற்றி பொது மக்களுக்கு இனிப்புகள் வழங்க வேண்டும், அதே போல் சென்னையில் நடைபெறும் முப்பெரும் விழாவில் பெருந்திரளாக கலந்து கொள்ள வேண்டும். 2026 சட்டமன்றத் தேர்தலில் தி.மு.க. கூட்டணி 200க்கும் மேற்பட்ட தொகுதிகளில் வெற்றி பெறவேண்டும் என்ற ஒரே நோக்கத்தில் கழக நிர்வாகிகள் மற்றும் உறுப்பினர்கள் ஒன்றிணைந்து பணியாற்ற வேண்டும், மேலும் அமைச்சர் உதயநிதி ஸ்டாலினை துணை

முதல் அமைச்சராக்க வேண்டும் என்பன உள்பட பல்வேறு தீர்மானங்கள் நிறைவேற்றப்பட்டது. கூட்டத்தில் பொது செயற்குழு உறுப்பினர்கள் விஜயகுமார், கமருதின். ஒன்றிய செயலாளர்கள் அன்பு மணிமாறன், அரவிந்தன், ஆறுமுகம், சின்னத்தம்பி. 2 கிருஷ்ணன், வசந்தவேல், வைத்தியநாதன், ராஜவேல்,நகர கழக செயலாளர்கள்

டேனியல்ராஜ், துரைதாக பிள்ளை, ஒன்றியக்குழு தலைவர்கள் அலமேலு ஆறுமுகம், திலகவதி நாகராஜன், மாவட்ட இளைஞரணி துணை அமைப்பாளர் அருள் உள்பட மாவட்ட ஒன்றிய நகர பேரூர் கழக நிர்வாகிகள் பலர் கலந்து கொண்டனர்.




திருப்பூர் தெற்கு மாவட்டம், தாராபுரம் சட்டமன்ற தொகுதிக்குட்பட்ட தாராபுரம் ஒன்றியம், கொளத்துப்பாளையம் பேரூர், சின்னக்காம்பாளையம் பேரூர் கழக பொது உறுப்பினர்கள் கூட்டம் தாராபுரம் ஸ்ரீ கோகுல் திருமண மண்டபத்தில் மாவட்டக் கழக செயலாளர் இல.பத்மநாபன் தலைமையில், ஒன்றிய செயலாளர், ஒன்றியக்குழு பெருந்தலைவர் எஸ்.வி.செந்தில்குமார் வரவேற்புரையில் பேரூர் கழக செயலாளர்கள் ஜீவா கே.கே.துரைசாமி, ரா.பன்னீர் செல்வம் முன்னிலையில் நடைபெற்றது. இக்கூட்டத்தில் கழக உயர்நிலை செயல் திட்டக்குழு உறுப்பினர், தமிழ் வளர்ச்சி மற்றும் செய்தித்துறை அமைச்சர் மு.பெ.சாமிநாதன், ஆதிதிராவிடர் நலத்துறை அமைச்சர் கழக மகளிர் அணி துணை செயலாளர் என்.கயல்விழி செல்வராஜ், ஈரோடு நாடாளுமன்ற உறுப்பினர், கழக இளைஞர் அணி துணை செயலாளர் கே.இ.பிரகாஷ் ஆகியோர் சிறப்புரையாற்றினர். இதில் மாவட்ட, ஒன்றிய, பேரூர், கிளை கழக நிர்வாகிகள் உள்பட கழக துணை அமைப்புக்களின் அமைப்பாளர்கள் துணை அமைப்பாளர்கள் பலர் கலந்து கொண்டனர்.



திருப்பூர் வடக்கு மாவட்டக் கழக அலுவலகத்திலுள்ள முரசொலி மாறன் வளாகத்தில், தெற்கு மாநகரம், கருவம்பாளையம் பகுதி கழக கூட்டம் மாவட்ட கழக செயலாளர் திருப்பூர் தெற்கு சட்டமன்ற உறுப்பினர் க.செல்வராஜ் தலைமையில் நடைபெற்றது. இதில் தெற்கு மாநகர செயலாளர் டி.கே.டி.மு.நாகராசன், வடக்கு மாநகர செயலாளர், மாநகராட்சி மேயர் ந.தினேஷ்குமார், பகுதி செயலாளர் மியாமி ஆ.அய்யப்பன் உள்பட மாவட்ட, மாநகர, பகுதி கழக நிர்வாகிகள், வட்டக் கழக செயலாளர்கள், கழக துணை அமைப்புக்களின் அமைப்பாளர்கள் துணை அமைப்பாளர்கள் பலர் கலந்து கொண்டனர்.